# விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம் (PGIS)

## பேராதனை பல்கலைக்கழகம்

## பணிப்பாளர் பதவி

பேராதனை பல்கலைக்கழக, விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் (PGIS) பணிப்பாளர் பதவிக்காக இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகமானது விஞ்ஞானத் துறையில் பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சிகளை வழங்குதல், முன்னெடுத்தல் மற்றும் மேம்படுத்தல் மற்றும் ஆராய்ச்சி நோக்கத்திற்காக 1996 ஆம் ஆண்டு தேசிய நிறுவகம் ஒன்றாக நிறுவப்பட்டது. PGIS நிகழ்ச்சித் திட்டத்தில் உயிர் இரசாயனம் மற்றும் உயிரியல், உயிர் மருத்துவ விஞ்ஞானங்கள், இரசாயன விஞ்ஞானங்கள், புவி விஞ்ஞானங்கள், சுற்றுச்சூழல் விஞ்ஞானம், கணிதவியல், பௌதீகவியல், தாவர விஞ்ஞானம், விஞ்ஞானக் கல்வி, புள்ளிவிபரம் மற்றும் கணினி விஞ்ஞானம் மற்றும் விலங்கியல் விஞ்ஞானம் ஆகிய பதினொரு துறைகளில் கற்கைகள் நடத்தப்படுகின்றன.

PGIS இன் கட்டளையின் பிரகாரம், பணிப்பாளரானவர் முழு நேர அதிகாரி என்பதோடு முதன்மை நிறைவேற்று அதிகாரி, முதன்மை கல்விசார் அதிகாரி மற்றும் நிறுவகத்தின் கணக்கு அதிகாரியுமாவார். பணிப்பாளரானவர் முகாமைத்துவ சபை, ஒருங்கிணைப்புக் குழுவின் பதவி வழி உறுப்பினர் மற்றும் தலைவர் என்பதோடு நிறுவகத்தின் ஒவ்வொரு கற்கை சபையின் பதவி வழி உறுப்பினர் ஒருவருமாவார். இந்தப் பதவிக் காலம் மூன்று ஆண்டுகள் என்பதோடு விண்ணப்பதாரர்கள் இலங்கை பிரசையாகவும் விண்ணப்ப இறுதித் திகதிக்கு 63 வயதுக்கு குறைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

எதிர்பார்ப்புடைய விண்ணப்பதாரர் ஆய்வு மற்றும் நிர்வாக அனுபவத்தின் சிறந்த களப் பதிவு ஒன்றுடன் மேல் குறிப்பிடப்பட்ட விஞ்ஞான துறைகளில் ஏதாவதொன்றில் பட்டப்பின்படிப்பு தகைமையை பெற்றிருத்தல் வேண்டும். கல்வி நிறுவகம் ஒன்றில் நிர்வாக அனுபவம் அனுகூலம் ஒன்றாக அமையும். வெற்றிகரமான அபேட்சகர் பலதரப்பட்ட கல்விச் சூழல் ஒன்றில் பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான சிறந்த ஆளிடை திறன்களை பெற்றவராக இருத்தல் வேண்டும் என்பதோடு சமூகத்திற்கான நிறுவகத்தின் கடப்பாட்டை தெரிந்திருத்தல் வேண்டும். அவர் கல்விசார் தலைமைத்துவத்தை வழங்குவதற்கும் முகாமைத்துவ சபையின் முடிவுகளை செயற்படுத்துவதற்கும் பொறுப்பாவார்.

விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்படுதல் வேண்டும்:

I. பிறந்த திகதி, வெளியீடுகளின் பட்டியல், வகித்த நிர்வாக பதவிநிலைகள் மற்றும் கல்வி/ தொழில்முறை அடைவுகள் உள்ளடங்கிய விண்ணப்பதாரரின் விரிவான சுயவிபரக் கோவை.

II. நிறுவகத்தின் மேம்பாட்டுக்கான நோக்கின் அறிக்கை ஒன்று.

III. நியமிக்கப்பட்டால் முன்மொழியப்படும் அடைவுகள் தொடர்பில் சுருக்கமான விபரம் ஒன்று.

IV. பதவியில் உள்ள பணிப்பாளர் அல்லது இதற்கு முன்னர் நிறுவகத்தின் பணிப்பாளராக பதவி வகித்தவர் விண்ணப்பதாரராயின் அவரது முதல் பதவிக் காலத்தில் பெற்ற அடைவுகள் தொடர்பில் குறிப்பிட்டு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

V. விண்ணப்பதாரர்கள் அரச சேவை, கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபைகள் அல்லது உயர் கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் பட்சத்தில், நியமனம் பெற்ற விண்ணப்பதாரரை விடுவிக்க முடியும் என்பதை குறிப்பிட்டு தொழில் வழங்குநரிடம் இருந்து கடிதம் ஒன்று.

விண்ணப்பங்களை 2024 செப்டெம்பர் 24 அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு சிரேஷ்ட உதவி பதிவாளர், விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம், பேராதனை பல்கலைக்கழகம், த.பெட்டி: 25, பேராதனை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கைகளால் கொண்டுவந்து சேர்த்தல் வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “பணிப்பாளர் பதவி, விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம், த.பெட்டி 25, பேராதனை பல்கலைக்கழகம்” என்று குறிப்பிடுதல் வேண்டும்.

தவிர, மேலுள்ள ஆவணங்கள் மற்றும் வேறு எந்த ஒரு ஆவணங்களையும் PDF வடிவத்தில் மென் பிரதிகளில் sar@pgis.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். மேலதிக விபரங்களுக்கு, சாதாரண அலுவலக நேரங்களில் 081-2394782 என்ற தொலைபேசி இலக்கத்தில் PGIS, சிரேஷ்ட உதவிப் பதிவாளரை தொடர்புகொள்ளவும் அல்லது www.pgis.lk என்ற PGIS இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2024 ஜனவரி 01 ஆம் திகதிய 01/2024 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றுநிருபத்தில் நிர்ணயிக்கப்பட்ட முறையை பின்பற்றி தேர்வு மேற்கொள்ளப்படும். பணிப்பாளர் பதவியின் நியமன நடைமுறை தொடர்பில் மேலதிக விபரங்களுக்கு மேற்குறிப்பிடப்பட்ட சுற்றுநிருபத்தை பார்க்கவும்.

சிரேஷ்ட உதவிப் பதிவாளர்
விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம்
2024 ஓகஸ்ட் 25